**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**

இந்தியா வானிலை ஆய்வு துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-08-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-08-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-08-27 | 2022-08-28 | 2022-08-29 | 2022-08-30 | 2022-08-31 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 34.0 | 35.0 | 26.0 | 35.0 | 45.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 31.0 | 31.0 | 31.0 | 31.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 22.0 | 21.0 | 21.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 10.0 | 8.0 | 6.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 290 | 300 | 300 | 40 | 40 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஆகஸ்ட் 27,28,29,30,31தேதிகளில் மிதமான மழை முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31-33 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-24 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 6-10 கி.மீ வரை வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 31.08.2022 முதல் 06.09.2022 வரை இயல்பை விட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. வரும் நாட்களில் மிதமான மழை முதல் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மழை நாட்களில் தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் மிதமான மழை முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படையாமல் இருக்க வடிகால்வசதி அமைக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் நெல் வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்கவும் மற்றும் நீர் பாசனத்தை தள்ளி வைக்க வேண்டும். |
| நிலக்கடலை | நிலக்கடலை வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும். |
| உளுந்து | உளுந்து வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் மற்றும் களையெடுத்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | மக்காச்சோள வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ளவும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் கத்தரி வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் நீர்பாய்ச்சுவதை தள்ளி போட வேண்டும். |
| மஞ்சள் | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ளவும் . மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் மற்றும் களையெடுத்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பசுமாடுகளை ஆறு, ஓடை, குளக்கரையில் கட்டி வைக்க வேண்டாம். ஒழுகும் கொட்டகையை சீர்செய்ய வேண்டும். உலர்தீவனமும், பசும்புல்லும் கலந்து கொடுத்து கழிச்சலை தவிர்க்க வேண்டும். தூய்மையான குடிநீரை தர வேண்டும். குட்டை நீர், தேங்கிய நீரை குடிக்க தர வேண்டாம். மூன்று மாத கன்றுகளுக்கு குடற்புழு நீக்கமும் ஆறு மதத்திற்கு மேலுள்ள கன்றுகளுக்கும் அடைப்பான் நோய் , தொண்டை அடைப்பான் நோய்க்கான தேவைக்கேற்ப செலுத்த வேண்டும். வெளிப்புற ஒட்டுண்ணி நீக்கம் செய்து நோய் பரவலை தடுக்க வேண்டும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து ஒரு வாரத்திற்கு பின்பு பி பி ஆர் தடுப்பூசியும், ஒரு மாதத்திற்கு பின்பு துள்ளுமாரி நோய்க்கான ( ET ) தடுப்பூசியும் போடவேண்டும். ஆடுகளை சேறு சகதியில் விடக்கூடாது. வாரத்திற்கு இரண்டு நாட்கள் சுண்ணாம்பை தரையில் தூவவும். கால் குழம்பு அழுகலை தவிர்க்க வேண்டும். கழிச்சல் ஏற்பட்டால் சல்பாடிமிடின் மாத்திரையை பெரிய ஆட்டிற்கு ஒன்றும், குட்டிகளுக்கு கால் மாத்திரையும் தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வளர்ப்பாளர் | கோழிகுஞ்சுகளுக்கு இரவில் 98 டிகிரி அறை வெப்பநிலையை பராமரிக்க வேண்டும். படுதாவை பண்ணையை சுற்றிலும் கட்ட வேண்டும். தரைக்கூளம் நனையாமல் பராமரிக்க வேண்டும். குஞ்சுகளுக்கு வெதுவெதுப்பான குறைந்த வெப்பநிலையில் உள்ள குடிநீரை இரவு நேரத்தில் தர வேண்டும். கழிச்சல் , ரத்த கழிச்சல் நோய் ஏற்பட்டால் ரேன்காக்ஸ் அல்லது சூப்பர் காக்ஸ் மருந்தை குடிநீரில் கலந்து தர வேண்டும். |